Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 132

சனிக்கிழமை
06 ஏப்ரல் 2024

பங்குனி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"ஒரே இடத்தில இருந்து வேரும் விழுதும் விட்டு வளர்ந்திருப்பினம் இனி கிளப்பிறது கஷ்டம் தான்"

வெறும் 2 வீதமான சிங்களவர்களுக்காக

# 2,506 ஏக்கர் ஆக்கிரமிப்பு 32 விகாரைகள் அமைப்பு!

## குச்சவெளியில் நிலவிழுங்கல்!

**திருகோணமலை, ஏப்ரல் 6**

**திருகோணமலை - குச்சவெளியில், தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான 2 ஆயிரத்து 506.5 ஏக்கர் நிலப்பரப்பை அடாத்தாக ஆக்கிரமித்து அங்கு 32 விகாரைகளை அமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

10

## இவர்களுக்கு இல்லையா இடமாற்றம்?

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ் :மாவட்டத்தின் 15 பிரதேசசெயலர் பிரிவுகளிலும், 7 வருடங்களுக்கு மேலாக 48 பேர் வழமையான இடமாற்றக் கொள்கைக்கு உட்படாது இருக்கின்றமை

10

சுண்ணக்கல் அகழ்வு

## மக்களின் எதிர்ப்பையடுத்து திரும்பிச் சென்றார் டக்ளஸ்



கிளிநொச்சி, ஏப். 6

பொன்னாவெளி சிமெந்து தொழிற்சாலையைத் திறக்கச் சென்ற அமைச்சர் டக்ளஸும் அவரால் பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்ட நபர்களும் மக்களின் எதிர்ப்பையடுத்து திரும்பிச் சென்றனர். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

10



கீரிமலையில் நேற்று

## காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணம், கீரிமலைப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டவிருந்த காணி சுவீகரிப்பு முயற்சி, பொது மக்களின் எதிர்ப்பையடுத்துத் தடுத்து நிறுத்தப்பட்டது. கீரிமலைப் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அளவீடு செய்து சுவீகரிக்கும்

10

## தமிழரசுக்கு எதிரான வழக்கு: ஏப்ரல் 24 அடுத்த தவணை!

திருகோணமலை, ஏப். 6

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, அதன் மீதான ஆட்சேபனைகளைத் தெரிவிக்க அவகாசம் வழங்கப்பட்டு, ஏப்ரல் 24 ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளது.

11

சுதந்திர மக்கள் சபையின்

## ஆறு எம்.பி.க்கள் சஜித் அணியில்

கொழும்பு, ஏப். 6

டலஸ் அழகப்பெரும தலைமையில் பெரமுனவில் இருந்து வெளியேறிய 13 பேர் அடங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஆறு பேர், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் நேற்று இணைந்து கொண்டனர்.

10

## நாமல் களமிறங்கினால் பெரமுன உடையுமாம்!

அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்சவை களமிறக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டால் பொதுஜன பெரமுன இரண்டாகப் பிளவுபடும் - என்று அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்றுத் தெரிவித்தார்.

10

## சுற்றுச்சூழலை மாசுபடுத்தினால் சட்ட நடவடிக்கைகள் பாயும்!

வடமாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 6

வடக்கு மாகாணத்தில் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவோருக்கு எதிராக இனிவரும் நாள்களில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர்

10

## மாவீரர்களை அஞ்சலித்தால் இனி கடும் நடவடிக்கையாம்

கொழும்பு, ஏப். 6

மாவீரர்களை அஞ்சலித்தால் இனி மிகக்கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சிறிலங்கா பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான ஆனந்த ஜயமன்னவால், மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடக்கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனு நேற்றுமுன்தினம்

10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடியதால் பழிவாங்கல்

## கைதான நடிகை தமிதா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

நாட்டைக்காக்கவே போராட்டத்தில் ஈடுபட்டோம். ஆனால் போராட்டக்காரர்கள் பழிவாங்கப்படுகின்றார்கள். எனக்கு எதிரான நடவடிக்கைகள்கூட இதன் ஓர் அங்கமே என்று நடிகை தமிதா அபேரத்ன தெரிவித்தார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்படுவதற்கு முன்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுக் கொண்டிருந்தவேளை அது நிறுத்தப்பட்டு அவர் கைது செய்யப்பட்டு அழைத்துச்செல்லப்பட்டார்.

"நாட்டைக் காக்கவே அரகலயவில் ஈடுபட்டோம். அதற்கான பழிவாங்கல் இடம்பெறுகின்றது. பொலிஸ்மா அதிபரும் இந்தச் செயலில் ஈடுபடுகின்றார். கொள்ளையர்களின் உண்மையான முகத்தை அம்பலப்படுத்தினோம். எனினும் பொருளாதாரக் கொலையாளிகள் பாதுகாக்கப்படுகின்றனர். போராட்டக்காரர்கள் கைது செய்யப்படுகின்றனர். எமக்கு எதிராக வழக்குத் தொடுத்தவர்கூட எமக்கு நிதி வழங்க வேண்டியுள்ளது. எம்மிடம் அவர் கொள்ளையடித்தார். தற்போது மொட்டுத் தரப்புடன் இணைந்து இவ்வாறு செய்துள்ளார். சிறையில் இருக்கவேண்டியவர்கள் இன்று வெளியில் இருக்கின்றனர். வெளியில் இருக்க வேண்டியவர்கள் சிறையில் இருக்கின்றனர். விசாரணை என்பது எதேச்சதிகாரமாக முன்னெடுக்கப்படக் கூடாது" - என்றார். (ஒ-44)

# பொருள்கள் விற்பனையில் வியாபாரிகளுக்கு இலாபமே

## வழிவகைகள் பற்றிய குழுவில் தகவல்

கொழும்பு, ஏப். 6

**இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை சந்தை விலையின் அடிப்படையில் விற்பனை செய்யும்போது வியாபாரிகள் அதிக இலாப மீட்டுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயம் தெரிய வந்தது. அத்தியாவசிய உணவுப் பொருள்களின் கிலோவொன்றின் சந்தை விலைக்கும், இறக்குமதிசெய்யப்பட்ட விலைக்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகிறது.

அதன்படிவியாபாரிகள் இதில்கிலோவொன்றுக்கு 100- 1000 ரூபா வரையில் இலாபம் ஈட்டுகின்றனர். அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு பதிலாக, வர்த்தக அமைச்சு நேரடியாக இறக்குமதி செய்து நுகர்வோருக்கு வழங்குவதற்கான திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்று குழு சுட்டிக்காட்டியது. (ச-இ)

# ரணிலுக்கு ஐ.நா.வில் பதவி



கொழும்பு, ஏப். 6

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் அடுத்தாண்டு உயர்பதவியொன்று கிடைக்கப்பெறவுள்ளது. இதற்கு இந்தியாவும் இணக்கம் தெரிவித்துள்ளது என்று ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

"ரணிலுக்கு சர்வதேசத்தில் நல்லபெயர் வந்துள்ளது. ஜனாதிபதி வேட்பாளர் பெயர்ப்பட்டியலில் அவரின் பெயர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் 2025 இல் ஐ.நா.வில் ரணிலின் பெயர் இருக்கும். அந்தப் பதவி மூலம் எமது நாட்டுக்கும் கௌரவம் கிட்டும். அந்தப் பதவி ஐ.நா. பொதுச்செயலாளர் பதவி அல்ல. அதற்கு அடுத்த நிலையில் உள்ள பதவி. பிறகு ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்கும் போட்டியிடலாம். இந்தியாவும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது" - என்றார்.

# கடையை மூடி 'சீல்' நீதிமன்றம் உத்தரவு

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தொடுக்கப்பட்ட வழக்கில் கடையை மூடி 'சீல்' வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடையைசுகாதாரத்துக்கு ஒவ்வாத நிலையில் பேணியதுடன், 19 வகையான 245 காலாவதியான பொருள்களை விற்பனைக்கும் காட்சிப்படுத்தியவர்த்தகருக்கு 95 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. அத்துடன் கடையை மூடி சீல் வைக்குமாறும் பணிக்கப்பட்டது.

மேலும் பண்டத்தரிப்பில் புழு மொய்த்த வண்டடித்த அரிசி, கடலைப்பருப்பு என்பவற்றை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தி வைத்திருந்த ஒருவருக்கு 65 ஆயிரம் ரூபா தண்டமும் காலாவதியான உணவுப்பொருள்கள் வைத்திருந்த இன்னொருவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா தண்டமும், சுகாதாரத்துக்கு ஒவ்வாத நிலையிலும் காலாவதியான வண்டடித்த மா, உப்பு போன்றவற்றை கொண்டு மிக்சர் உற்பத்தியை மேற்கொண்ட ஒருவருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் அறவிடப்பட்டன.

மேலும் ஆனைக்கோட்டையில் மோசமான நிலையில் உணவகத்தை நடத்திய இருவருக்கு வழக்குத் தாக்கல் செய்த நிலையில் இருவரும் நீதிமன்றில் சமுகமளிக்காமையால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (ஒ-26)

# சுகாதாரச் சீர்கேடு உணவகத்துக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஏப். 6

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட அராலி பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மூளாய் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், தங்கள் பிரிவுகளில் திடீர் பரிசோதனைகளின்போது திகதி காலாவதியான உணவுப் பொருள்கள், பழுதடைந்த உணவுப் பொருள்கள், உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத 6 உணவகங்கள், பல சரக்கு விற்பனை நிலையங்கள் சிக்கிக்கொண்டன.

மேற்படி 6 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மல்லாகம் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம், உணவக உரிமையாளர்களுக்கு 90 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தது. அத்துடன் ஒரு உணவகம் 'சீல்' வைத்தும் மூடப்பட்டது. (ஒ-26)

# விளையாட்டுப்போட்டிகள் நடத்த மீண்டும் தடை

கொழும்பு, ஏப். 6

பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப் போட்டிகளை தற்போது நாட்டில் நிலவும் அதிக வெப்பநிலையைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாக ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவுறுத்தியுள்ளார். தமிழ் – சிங்கள புத்தாண்டின் பின்னர் விளையாட்டுப்போட்டிகளை நடத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ச–இ)



# புதிய துணைத்தூதுவருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு!

கொழும்பு, ஏப். 6

இலங்கைக்கான யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் புதிய தூதுவராகப் பொறுப்பேற்றுள்ள சிறி சாய் முரளியை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் அண்மையில் மரியாதை நிமித்தம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ஒ-100)

# பெரமுனவின் வேட்பாளர் ஜனாதிபதி ரணில் இல்லை

## உதயங்க வீரதுங்க கூறுகிறார்

பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க அல்லர். மற்றுமொரு வேட்பாளரே களமிறக்கப்படுவார். இதுதொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று ராஜபக்ச குடும்பத்தின் பேச்சாளர் எனக் கருதப்படும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

"மொட்டுக் கட்சியின் வேட்பாளர் ரணில் அல்லர் என்பது அவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மற்றுமொரு கட்சி, கூட்டணியில்தான் ரணில் களமிறங்க வேண்டிவரும். மொட்டுக்கட்சியின் ஜனாதிபதிவேட்பாளர் பட்டியலில் தம்மிக்க பெரேரா இன்னும் உள்ளார். பஸில், நாமல் ஆகியோருடன் அவர் ஒத்துழைப்புடன் செயற்பட்டுவருகின்றார்"- என்றார் அவர். (ஒ-44)

# மீனவர்களை விடுவிக்குக; காரைக்காலில் போராட்டம்

கொழும்பு, ஏப். 6

இலங்கைச் சிறையிலுள்ள இந்திய மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் மக்களவைத் தேர்தலைப் புறக்கணித்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்போம் எனக் காரைக்கால் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை, எல்லைதாண்டி வந்ததாகக் கூறி இலங்கைக் கடற்படையினர் அடிக்கடி கைதுசெய்கின்றனர். அவர்களது படகுகளையும் பறிமுதல் செய்கின்றனர். இலங்கை அரசால் மீனவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படுவதுடன், படகுகளையும் விடுவிப்பதில்லை.

எனவே 2 நாள்களுக்குள் மீனவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால், விசைப்படகுகளில் கறுப்புக் கொடியை ஏற்றிப் போராட்டத்தை தொடர்வோம்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் சூரியன் உச்சம்

யாழ்ப்பாணம், ஏப். 6

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 9ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரை சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் 9 ஆம் திகதி செங்கலடி, ஏறாவூர் பிரதேசங்களுக்கு மேலாகவும், 10 ஆம் திகதி தாண்டிக்குளம், புளியங்குளம், வாகரைப் பகுதிகளுக்கு மேலாகவும், 11 ஆம் திகதி கிண்ணியா, ஈரப்பெரியகுளம் பகுதிகளுக்கு மேலாகவும், 12 ஆம் திகதி திரியாய், வஞ்சையன் குளம், புதுக்காமம், ஓமந்தை, மருதன் குளம், இரணைமடு, அம்பகாமம் பகுதிகளுக்கு மேலாகவும், 13 ஆம் திகதி அக்கராயன், முறிகண்டி, கெருடமடு, குமுழமுனை, தண்ணீரூற்று பகுதிகளுக்கு மேலாகவும், 14 ஆம் திகதி மண்டைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, மணற்காடு, மருதங்கேணி,உடுத்துறைப் பகுதிகளுக்கு மேலாகவும் 15 ஆம் திகதி பருத்தித்துறை, நெடுந்தீவுக்கு மேலாகவும் சூரியன் உச்சம் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் காலப்பகுதிகளில் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வெப்பநிலை மிக உயர்வாகக் காணப்படும். அதேவேளை இந்தப் பகுதிகளுக்கு மேற்குறிப்பிட்ட காலங்களில் மிதமான மழைக்கும் வாய்ப்புள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-66)

## சிறுபோக சி.வெங்காயம் மே, ஜூனில் செய்கை

யாழ். குடாநாட்டில் சிறுபோகத்துக்கான சின்ன வெங்காயச்செய்கைக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

மே, ஜூன் மாதங்களில் இந்தச் சின்ன வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இம்முறை 2 ஆயிரத்து 200 வரையிலான ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சின்ன வெங்காயச் செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கடந்த பெரும்போகத்துக்கான சின்னவெங்காயச்செய்கையின் அறுவடை தற்போது நிறைவுபெற்றுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ச-17)

## கூ. பணியாளருக்கு முற்கொடுப்பனவு

சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச்சங்கங்கள்பணியாளர்களுக்குப் புத்தாண்டு முற்பணகொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் அரசாங்கத்தால் அதிகரிப்புச் செய்யப்பட்ட 5 ஆயிரம்ரூபா கொடுப்பனவு மற்றும் விடுமுறை காலத்துக்கான கொடுப்பனவு நிலுவை என்பனவும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. (ச-17)

# பயிர்களைப் பாதுகாக்க விழிப்புணர்வுச் செயற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 6

தற்போதைய கடும் வறட்சியால் மரக்கறிப் பயிரினங்களைப் பாதுகாப்பது தொடர்பில் விவசாயத் திணைக்களத்தால் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடும் வறட்சித் தாக்கத்தால் பயிரினங்கள் ஒருவித பூச்சித் தாக்கத்துக்கு இலக்காகி உள்ளன. அவற்றிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கான ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்க விவசாயப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-17)

## பொருள்கள் ஒப்படைப்பு

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்திலிருந்து சிவராத்திரி தினத்தன்று பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் வவுனியா நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் கடந்த 19ஆம் திகதி நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் பொருள்களும் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஒ-18)

மாணவர்கள் மீதான

# ஆசிரியர்களின் கண்டிப்பு எல்லை மீறக்கூடாது

## வடக்கு ஆளுநர் அறிவுறுத்தல்



யாழ்ப்பாணம், ஏப். 6

மாணவர்கள் மீது தண்டனை என்ற பெயரில் துன்புறுத்தல்கள் அதிகரித்துவரும் நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் விசேட அறிவித்தலை விடுத்துள்ளார். இது தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பிய அறிக்கையில்;

கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களை வளப்படுத்தவேண்டிய ஆசிரியர்களே, மாணவர்களை அடித்து, துன்புறுத்தி மருத்துவமனைகளில் சேர்ப்பிக்கும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

கடந்த சில மாதங்களுக்குள் இவ்வாறாக செயற்பட்ட ஆசிரியர்கள் தொடர்பில், ஆளுநரின் செயலகத்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பதிவாகிய மூன்று சம்பவங்கள் தொடர்பில் ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கற்றலில் சிக்கல்களை எதிர் நோக்கும் மாணவர்களை இவ்வாறு கற்றலில் ஈடுபடச் செய்வது என்ற யுக்தியைக் கண்டறிந்து அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

தற்போது பதிவாகியுள்ள இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் தங்களின் பொறுப்புகளை உணர்ந்து கட[illegible] (ஒ-26)

# புதினம் தெரியுமோ?

மலைவிழுங்கி மகாதேவன் எண்டு மோசடி செய்யிறவையைச் சொல்லிறவை. இப்ப கன இடங்களில மணல்விழுங்கி மகாதேவன்கள்தான் கூடுதலா இருக்கினம். கிளிநொச்சியில இருக்கிற கல்மடுக்குளத்தின்ர அணைக்கட்டில ஒரு உடைப்பைத் திருத்திறதுக்கு ஒரு கொம்பனிக்கு கொன்றாக்ட் குடுத்தவை. அப்பிடி உடைப்பை அடைக்கவேணும் எண்டா, அதுக்குத் தேவையான களிமண்ணை குளத்தை ஆழமாக்கி எடுத்துத்தான் செய்யிறவையாம். எந்தளவுக்கு உடைப்பு இருக்கோ அதுக்குத் தேவையான மண்ணைக் குளத்தில இருந்து அந்த கொன்றாக்ட்காரர் எடுத்து, குளத்தைப் புனரமைக்க வேணும் எண்டதுதான் ஒப்பந்தம். அந்தக் குளத்தின்ர உடைப்பை அடைச்சு, புனரமைப்பும் நல்லபடியா முடிஞ்சிட்டுது. இப்ப அந்தக் கொன்றாக்ட்காரர் 'குளத்தை ஆழப்படுத்தேக்க வெளியில எடுத்த 3000 டிப்பர் மணலை (10ஆயிரம் கியூப்) நாங்களே விக்க விடோணும்' எண்டு நிக்கினமாம்.

அந்தக் கொன்றாக்ட்காரர் உடைப்பை அடைக்கத் தேவையான மண்ணைத்தான் குளத்துக்கை இருந்து எடுக்கலாம் எண்டுதானே ஒப்பந்தம். அப்பிடித் தோண்டேக்க ஒண்டிரண்டு கியூப் மணல் கூட வாறது வழமைதான். ஆனால் இப்பிடி ஒரு உடைப்பைத் திருத்திறதுக்கு 3000 டிப்பர் மணலை குளத்துக்க இருந்து வெளியில எடுக்கிறதெண்டால் அது வேணுமெண்டேதான் எடுபட்டிருக்கவேணும். இப்பிடி குளத்துக்கால எடுத்துக் குவிச்சுக்கிடக்கிற 3000 டிப்பர் மணலின்ர பெறுமதி 7 கோடி ரூபாவுக்கும் கூடவாம். அதைத்தான் அப்பிடியே தங்களுக்குத் தரச்சொல்லி கொன்றாக்ட்காரர் கேட்டிருக்கினம்.

அவையள் தாங்கள் நினைச்சபடி குளத்து மண்ணை அள்ளியெடுக்கும் வரைக்கும் நீர்ப்பாசனத் திணைக்களக்காரர் பேய்க்குப் பேன் பார்த்துக் கொண்டிருந்தவையோ? ஒரு வேலையை கொன்றாக்ட்காரரிட்ட குடுத்தால், அதை சம்பந்தப்பட்ட திணைக்களக்காரர் மேற்பார்வை செய்திருக்க வேணும். அப்பிடி மேற்பார்வை செய்யேக்க கட்டாயம் இப்பிடி அகிழான் கண்டபடி புத்தெடுத்தமாதிரி கொன்றாக்ட்காரர் மண்ணைக் கிண்டேக்கையே கண்டு பிடிச்சிருக்கலாம். இப்பிடி 3000 டிப்பரையும் தோண்டமுதல் ஆரம்பத்திலேயே அதை நிப்பாட்டியும் இருக்கலாம். ஆனால் அவை அதைச் செய்யேலை. நீர்ப்பாசனத் திணைக்களக்காரரும் கொன்றாக்ட்காரரோட சேர்ந்துதான் இதை எடுக்க வெளிக்கிட்டிருக்கினம் எண்டு அங்கத்தைச் சனங்கள் குமுறுகினம்.

இப்ப சிறீதரன் எம்.பி.யிட்ட சனம் விசயத்தைச் சொல்ல, அவர் கடிதம் எழுதி கொன்றாக்ட்காரருக்கு அந்த மணலைக் குடுக்கவேண்டாம் எண்டு உரியவைக்குச் சொல்லியிருக்கிறாராம். அதுக்குப் பிறகு அந்த ஏரியாவில உள்ள மீனவர் சங்கம் அந்த மணலை தங்களுக்குத் தரச்சொல்லிக் கேட்டிருக்கு. அந்தமணலை வித்து வாற காசில தங்கட ஏரியாவில உள்ள சின்னச்சின்ன திருத்தவேலையளைச் செய்யோணும் எண்ட நிபந்தனையோட, அந்த மீனவ சங்கத்துக்குத்தான் மணலைக் குடுக்கப்போயினமாம்.

இந்த மணலை விழுங்க பிளான் போட்ட கொன்றாக்ட்காரருக்கு நீர்ப்பாசனத் திணைக்களக்காரர் மட்டுமில்லை, அந்த மாவட்டத்துக்கு முந்திப் பொறுப்பாயிருந்த அதிகார 'அம்மணியும்' கடும் சப்போர்ட்டாம். அந்தத் துணிவிலதான் இப்பிடி மண்ணை விழுங்க நினைச்சிருக்கினம். கடைசியில அவையின்ர கனவில மண் விழுந்ததுதான் மிச்சம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் மனோவைக் களமிறக்குக

## சிவசேனை வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 6

இலங்கையில் இந்துக்கள் இனமாக வாழ்வது வினாக்குறி ஆகி வருகிறது. புத்தர்கள் ஒருபுறம், முகமதியர்கள் (முஸ்லிம்கள்) மறுபுறம், கிறிஸ்தவர்கள் மறுபுறம். இந்த மூன்று மதத்தினரிடையே உள்ள தீவிரர்கள் இந்து மதத்தின் இருப்பையே அச்சுறுத்துகின்றனர். புத்த தீவிரர்களும், முகமதிய தீவிரர்களும், கிறிஸ்தவ தீவிரர்களும் இலங்கையில் தங்கள் இருப்பை உறுதி செய்வதற்காக இந்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கக் கடுமையாக முயல்கின்றனர். இந்த நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இந்துக்கள் மனோ கணேசனைப் பொது வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கவுள்ளனர்.

இந்துக்களுக்கு அரசியல் அதிகாரமே இல்லை. இந்துக்களின் அரசியல் வலிமையைச் சேர்க்க இலங்கையின் அனைத்து இந்துக்களும் அனைத்து தேர்தல்களிலும் ஓர் இந்து வேட்பாளருக்கே வாக்களிக்கவேண்டும். ஒரே நேரத்தில் அல்லது தொடர்ச்சியாக மூன்று தேர்தல்கள் வர இருக்கின்றன. இம் மூன்று தேர்தல்களிலும் வேரூன்றிய இந்துப் பின்னணியைக் கொண்ட வேட்பாளர்களுக்கே இலங்கை இந்துக்களின் எழுச்சிக் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது இந்து வேட்பாளர் போட்டியிட்டால் மலையகம், மேற்கு, தெற்கு, கிழக்கு, வடக்கு என இலங்கையின் அனைத்துத் திசைகளிலிருந்தும் 20 இலட்சம் இந்து வாக்காளர்கள் அவருக்கு வாக்களிப்பார்கள் - என்றுள்ளது. (ஒ-66)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 6

துன்னாலை ஆயில் நின்றொல்லை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம், சாரதாபீடம் சிவாச்சாரியார் சிவஸ்ரீ ராம் சபாநாதக்குருக்கள் தலைமையில், கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை தீர்த்த உற்சவமும் நடைபெற்று இரவு கொடியிறக்கத்துடன் உற்சவங்கள் நிறைவு பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-100)



## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப். 6

நல்லூர்ப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக்கொடை முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 2.30 வரை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முகாமில் குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டுக்குழு கேட்டுக்கொண்டுள்ளது. (ச)

◇◇◇◇

மல்லாகம், ஏப். 6

சங்கத்தமிழன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கிஷோத்மனின் ஞாபகார்த்தமாக, மல்லாகத்தில் அமைந்துள்ள மேற்படி கழக அலுவலகத்தில் குருதிக் கொடை முகாம் நிகழ்வு, இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ப-66)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர் ஆவணப்படங்கள் வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகஊடகக்கற்கைகள்துறை மாணவர்களால் தயாரிக்கப் பட்ட மக்களின் வாழ்வியலைச்சித்திரிக்கும் பத்து ஆவணப்படங்கள் எதிர்வரும் 08 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் திரையிடப்படவுள்ளன.

தமிழரின் பாரம்பரியமாக விளங்கும் தவில் இசைக்கருவியின் உருவாக்கமும் நுட்பமும் பற்றிய பதிவான 'தவில் கொட்டு', காரைநகரின் ஊரி கிராமப் பெண்கள் தமது சொந்தக் கால்களில் நின்று மீன்பிடித் தொழிலாற்றுவது பற்றிப் பேசும் 'அலைமகள்', தீயில் எரிந்து போன லயன் குடியிருப்புகளுக்குப் பதிலாக மாற்று வீடுகள் கிடைக்கும் எனக் காத்திருக்கும் மலையக மக்களின் துன்பங்களைப்பதிவுசெய்யும் 'தணல்', மட்டக்களப்பிலுள்ள வேப்ப வெட்டுவானில் செங்கல் கைத்தொழில் தயாரிப்பு மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை எடுத்துக்காட்டும்; 'கல்வாடி', மலையகப் பெண்கள் மாதவிடாய்க் காலங்களிலும் மலைகளில் ஏறிக் கொழுந்து பறிப்பதில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி பேசும் 'கசிவு', தற்சார்பு வாழ்க்கைமுறை ஊக்குவிப்புப் பற்றிச் சிலாகிக்கும் 'உயிர்மை', தமிழர் கட்டட மரபின் பொக்கிஷங்களில் ஒன்றைக் கால ஆவணப்படுத்தும் 'நாற்சார் வீடுகள்', கண்ணிவெடிஅகற்றும் பணியாளர்களின் பணிச்சுமைகளை வெளிக்காட்டும் 'காவலின் காயங்கள்', மலையக மக்களின் நிலஉரிமை பற்றிய சவால்களைப் பேசும் 'நிலம்', வயல்வெளிகளில் இராக்காவல் காக்கும் விவசாயிகளின் வாழ்வியலைப் பதிவுசெய்த 'உறங்கா விழிகள்' ஆகிய ஆவணப் படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்த ஆவணப்படங்கள் ஊடகக் கற்கைகள் மாணவர்களின் எண்மியக் கதை சொல்லல் கற்றலின் பெறுதிகளாக அமைவதும், வருடந்தோறும் ஆவணப்படத் திரையிடலை ஊடகக் கற்கைகள் துறை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானில் வேலை; ரூ.20 கோடி மோசடி

கொழும்பு, ஏப். 6

ஜப்பான் நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 20 கோடி ரூபா பண மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவரை மத்திய மாகாண உயர் பொலிஸ் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவம் தம்புள்ள பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஜப்பான் மொழிப் பாட ஆசிரியராகத் தன்னை இனங்காட்டிய இவர், ஜப்பான் நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பலரிடமிருந்து 5 முதல் 20 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். பண உதவி கிடைக்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தம் ஏற்படக்கூடும். வீண் செலவுகள் ஏற்படும். மகாவிஷ்ணுவை வழிபட சிரமங்கள் குறையும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். வீண்அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக் கூடும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** மனதில் சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். பணம் கிடைப்பது தாமதமாகும். சிரமங்கள் ஏற்படும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மகாவிஷ்ணுவை வழிபடுவது நன்று. தடைகள் விலகி நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் தவிர்ப்பது அவசியம். வியாபாரத்தில் விற்பனை சுமாராக இருக்கும்.

**கன்னி:** தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைக்கும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம் . காரியம் சாதகமாக முடியும்.

**துலாம்:** திடீர்செலவுகள் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை. மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம் :** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மனஸ்தாபம் நீங்கும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வெளியில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனவருத்தங்கள் நீங்கும்.

**மீனம்:** மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

## பட்டிமன்றப் பயிலரங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 6

அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலகத்தின் ஏற்பாட்டில் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச் சுடர் த.இராமலிங்கம் வளவாளராகக் கலந்து கொள்ளும் பட்டிமன்றப் பயிலரங்கம், நல்லூர் நல்லை ஆதீன மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து, இலக்கியச் சுடர் த.இராமலிங்கம் தலைமையிலான சிந்தனை அரங்கம் நிகழ்வும், மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சஜித் என்னும் வேடதாரி


ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாகக் கூறி வருகின்றார். மக்களின் வாக்குகளைக் கவருவதற்கான அரசியல் பரப்புரைகளை அவரும் தொடக்கியிருக்கின்றார். இதன் ஒரு கட்டமாக, ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து வீசப்பட்ட ஈஸ்டர் விவகாரத்தில் தானும் தன் பங்குங்குக்கு கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

'புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு மாதங்களுக்குள் 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், 7 முதல் 9 தேசிய மற்றும் சர்வதேச அங்கத்தவர்களைக் கொண்ட, ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படும். இதன்மூலம் கடந்தகால மற்றும் தற்போதைய காலகட்டத்தின் முழுப் பாதுகாப்பு வேலைத்திட்டம் குறித்து ஆய்வு செய்யப்படும். எந்தவொரு நிறுவனத்திலும் எந்தவொரு நபரிடமும் எவ்வித தடையுமின்றி வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்ள இந்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படும். ஆணைக்குழுவை நிறுவிய 6 வாரங்களுக்குள் அதனுடன் இணைந்து பணியாற்ற ஸ்கொட்லண்யார்ட், எவ்.பி.ஐ. வெளிநாட்டுப் புலனாய்வு மற்றும் பாதுகாப்புச் சேவைகள், தேசிய புலனாய்வுத்துறை மற்றும் பாதுகாப்பு தரப்புகளைக் கொண்ட நிரந்தர விசாரணை அலுவலகம் நிறுவப்படும். ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் உத்தரவுகளுக்குட்பட்டு இலங்கையின் சட்டங்களின் கீழ் குற்றப்பத்திரிகைகளைச் சமர்ப்பிப்பது அல்லது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்டமா அதிபருக்குக் கட்டாயமாக்கப்படும். 1948ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 7 (2) அல்லது பிரிவு 24 திருத்தப்படும். மேற்கண்ட குற்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் மீது தீர்ப்பு வழங்க நிரந்தர உயர்நீதிமன்றம் நிறுவப்படவேண்டும். இதற்காக 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறை கட்டமைப்புச் சட்டத்தின் 12ஆவது பிரிவைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமா அதிபரைச் சாராத அரச தரப்பு சட்டத்தரணி அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்ட வரைவு கொண்டு வரப்படும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் கடந்த 2ஆம் திகதி உரையாற்றியிருந்தார்.

ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளான நீதியைப் பெற்றுக்கொடுத்தலுக்கு அவர் தனது செயலுரு எப்படி இருக்கப்போகின்றது என்பதைச் சொல்லியிருக்கின்றார். ஆட்சியைப் பிடித்து அதை நடைமுறைப்படுத்தினால் மாத்திரமே இவரது இந்தக் கூற்றை நம்பமுடியும். ஏனெனில் இலங்கையின் அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வருவதற்காக உறுதியளித்த எந்தவொரு விடயத்தையும் செய்ததேயில்லை. ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளுக்குத் தண்டனையைப் பெற்றுக் கொடுப்பது நல்லது. அதற்காக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே தனது வரைபடத்தை சஜித் வெளிப்படுத்தியமையும் சிறப்பானது.

ஆனால், ஈஸ்டர் தாக்குதல் நடப்பதற்குச் சரியாக 10 ஆண்டுகளுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய இறுதிப்போரின்போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் தங்களுக்கான நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். அவர்கள் தங்களுக்கான நீதி, சர்வதேச விசாரணையூடாகவே நிலைநிறுத்தப்படும் என்று நம்புகின்றார்கள். ஆனால், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்களின் வாக்குகளை அதிகளவில் சுருட்டிய சஜித் பிரேமதாஸ அந்த மக்களின் நீதிக்கான கோரிக்கை தொடர்பில் வாயே திறக்கவில்லை.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் விவகாரம் என்பது தெற்கின் அரசியலுடன் தொடர்புடையதாக்கப்பட்டுள்ளது. அதற்கு நீதியை நிலைநாட்டுவதன் ஊடாக தெற்கின் வாக்கு வங்கியைப் பலப்படுத்திக்கொள்ளலாம். ஆனால், போர்க்குற்ற விசாரணை தொடர்பில் வாய் திறந்தால் தெற்கின் வாக்குப்பலத்தை இழக்கவேண்டிய நிலை ஏற்படும் என்பதால், சஜித்தும் அமைதிகாக்கின்றார். இப்படியானவர்களுக்கு வாக்களிக்குமாறு கோரும் தமிழ்த் தலைவர்களை, தமிழ்மக்கள் தங்கள் தலைவர்களாகத் தொடர்வதற்கு இனியும் அனுமதிக்கப் போகின்றார்களா...?



# ஒரேநாளில் இரு தேர்தல்கள்; நடைமுறைச் சாத்தியமில்லை

தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 6**

**ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத்தேர்தலையும் ஒரேநாளில் நடத்துவது சாத்தியமில்லை என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலுக்கு நாடளாவிய ரீதியில் ஒரேயொரு உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டு மட்டுமே வழங்கப்படும்.

ஆனால், பொதுத்தேர்தலுக்காக 22 தேர்தல் மாவட்டங்களுக்கு 22 வாக்குச்சீட்டுகள் வழங்கப்படவேண்டும்.

ஒரேநேரத்தில் இரண்டு தேர்தல்களை நடத்துவது, வாக்களிப்பது குறித்தும் வாக்காளர்களுக்குச் சரியான தெளிவு இல்லை.

இதில் உருவாகும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரேநாளில் நடத்தமுடியாது என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-44)



## பொதுவேட்பாளராக களமிறங்கத் தயார்

சம்பிக்க மீண்டும் தெரிவிப்பு

அரசியல் கூட்டணியொன்று எதிர்காலத்தில் மலரவுள்ளது எனவும், அதன்மூலம் பொது வேட்பாளராக களமிறங்குமாறு கோரிக்கை விடுத்தால், அதனை ஏற்பதற்குத் தயார் எனவும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஜனாதிபதித் தேர்தல்தான் தற்போது நடத்தப்படவேண்டும். பொதுத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு எவராவது முற்பட்டால் அது வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் தாக்கம் செலுத்தும் -என்றார். (ஒ-44)

கல்வியமைச்சின்

## இணையத்தளம் மீது சைபர் தாக்குதல்

கொழும்பு, ஏப். 6

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீது சைபர் தாக்குதல் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டுள்ளது என்று இலங்கை கணினி அவசர தயார் நிலை குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உயர்தரத்தில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான பாடத்தை கற்பதாக கூறும் மாணவர் ஒருவரால் இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (ச-இ)

மே மாதத்தில்

## சாதாரண தரப் பரீட்சை ; உ/த பரீட்சை பெறுபேறு

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை மே மாத தொடக்கத்தில் வெளியிடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அதேவேளை மே மாத நடுப்பகுதியில் சாதாரணதரப் பரீட்சையை நடத்துவதற்கான பரீட்சை அட்டவணை இறுதிசெய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துகிறார் பஸில்

டிலான் குற்றச்சாட்டு

நாட்டில் அரசியல் உறுதிப்பாடற்ற நிலையை ஏற்படுத்தும் நோக்கிலேயே முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு பஸில் ராஜபக்ச கோரியுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குற்றஞ்சாட்டினார். அரசியல் உறுதிப்பாடற்ற தன்மையை உருவாக்கவே பஸில் தரப்பு முற்படுகின்றது. அவர்களுக்கு கட்சி முக்கியமே தவிர, நாடு அல்ல -என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-44)

**நாளை**

07.04.2024

**ஞாயிற்றுக்கிழமை**

**பங்குனி 25**

சுபநேரம் : 09.07 - 10.37

ராகுகாலம் : 04.37 - 06.07

**நாளொரு நல்வார்த்தை**

**ஒரு நல்ல சிறந்த தாய்**
**நூறு ஆசிரியர்களுக்கு**
**சமமாவாள்.**

—ஜோர்ஜ் ஹெர்பெர்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுரம் கொலை ஆறு பேர் கைது!

கிளிநொச்சி, ஏப். 6

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையொன்றில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியைப் பார்ப்பதற்காகச் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது வீதியில் ஏற்பட்ட கைகலப்பு கத்திக்குத்தில் முடிவடைந்த நிலையில், சவரிமுத்து ஜோன்பற்றிக் (வயது-31) என்ற குடும்பத்தலைவர் கொல்லப்பட்டார். சந்தேகநபர் ஒருவர் உடனடியாகவே கைது செய்யப்பட்டிருந்தார். மேலும் ஐவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் ஆறு பேரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதையடுத்தே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-113)

## அறைகள் வாடகைக்கு

யாழ்.மருத்துவ பீடத்திற்கு அண்மையில் பெண்களுக்கான மூன்று அறைகள் வாடகைக்கு உண்டு.

077 394 6821

## வேலையாட்கள் தேவை

முறிகண்டியில் அமைந்துள்ள சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை (தங்கி நின்று வேலை செய்யலாம்)

- சுத்திகரிப்பாளர்
- சமையல் உதவியாளர்
- முகாமையாளர்
- காசாளர்
- சமையல்காரர்
- உணவு பரிமாறுபவர்

ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 077 711 4226

(CS 00131) V-1

# STUDY IN INDIA

## SSM COLLEGE OF ARTS & SCIENCE

SSM Perfection Progress Prosperity

இலங்கை UGC யினால் அங்கீகரிப்பட்ட University Campus

( Approved by Govt. of Tamilnadu and Affiliated to Periyar University, Salem)

(Approved by UGC of India & Sri Lanka (IAU-013436)

KOMARAPALAYAM, TAMILNADU, INDIA.

## CARIEER GUIDANCE PROGRAMME ON HIGHER EDUCATION

For OL / AL Passed Students

O/L மற்றும் A/L சித்தியடைந்த மாணவர்களிற்கான உயர் கல்வி வழிகாட்டுதல் கருத்தரங்கு

**UG COURSES**

Attractive Fees Structure @ Very Affordable Price

- BCA., | B.Sc., Computer Science
- B.Sc., Artificial Intelligence & Data Science
- B.Sc., Visual Communication | B.Sc., Bio Technology
- B.Sc., Textile & Fashion Designing
- B.Sc., Hotel Management & Catering Science
- BBA., | B.Com., | B.Com., Computer Applications
- B.Com., Accounting & Finance | B.Lit., Tamil

**PG COURSES**

- MA., English | MA., Tamil* | M.Com.,
- M.Sc., Computer Science | M.Sc., Maths
- M.Sc., Textile & Fashion Designing

Eligibility For UG A LEVEL 3 PASS

For Foundation programm O Level Pass

THAI GLOBAL BUSINESS ADMINISTRATION TECHNOLOGICAL COLLEGE, THAILAND

DIPLOMA IN TOURISM MANAGMENT

2 year | Pass in 'A' Level

1st Year : Study in India / Srilanka | 2nd Year : Study in Thailand (5 Months Theory & 7 Months Internship with stipend)

SIDDHA VETHA UNIVERSITY, USA

Certificate ? Diploma Courses (Credit Based)

- Youth Career Accelerator (YCA)
- Specialized Courses in Various disciplines

Saito University, Malaysia.

1 YEAR ONLINE MBA DEGREE COURSE Pass in UG

BHARATHIDASAN UNIVERSITY LEARNER SUPPORT CENTER (IAC-001645)

**A seminar will take place on 10.04.2024 at 9.00 am**

**presented by Prof.Raja (SSM Educational Institutions)**

Venue : Angel International School Methers Lane, Manipay, Jaffna

SEMINAR CONTACT: MERVIN - 077 14 78 069

ANGEL INTERNATIONAL SCHOOL

## மரண அறிவித்தல்

### சுலோசனாதேவி மகாலிங்கம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பண்ணாகம் மற்றும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுலோசனாதேவி 2024.04.04 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும். காலஞ்சென்ற சின்னத்தம்பி- அமுதவல்லி ஆகியோரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற மகாலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர். அரச பெருந்தோட்ட யாக்கம்) அவர்களின் பாசமிகு மனைவியும். காலஞ்சென்ற கணேசபதி (பபா). தியாகேஸ்வரி (ராணி- கனடா). காலஞ்சென்றவர்களான ஜெகதீசன் (பேபி). குகதீசன் (பாபு). அருள்தீசன் (கிளி - லண்டன்). நந்தினிதேவி (நந்தினி- உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். லிங்கேஸ்வரன் (லிங்கேஸ்). Dr.மகாஜினி (லண்டன்). ஜெகஜனனி (பிரதம செயலாளர் செயலகம். வட மாகாணம்). காலஞ்சென்ற ஜெகஜீவன் (ஜீவன்) ஆகியோரின் ஆருயிர்த் தாயாரும். Dr.மஞ்சுதன் (லண்டன்). திருப்பதிகாந்தன் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியும். பக்ஷிகா (லண்டன்). கோகுலன் (லண்டன்). அனிஷ்ஷாந்த். அனிஷ்காந்த். அனிஷ்சியாந்த் ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2024.04.07) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் கோப்பாயிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 00136) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 09 . 1949

மறைவு 04 . 04 . 2024



### திருமதி ஜெயமலர் மனோகரன்

யாழ் சரசாலையைப் பிறப்பிடமாகவும், பரந்தனை வசிப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை தற்போது நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமலர் மனோகரன் 04.04.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோகரன் அவர்களின் அன்பு மனைவியும் கிருஸ்ணபாலன், கிருஷ்ணபவானி, கிருஷ்ணரூபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்திமதி, விக்கினேஸ்வரன், தனுசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சரவணன், சஜீவன், அஷ்விதா, கஸ்மிதா, அயுசி, அனுசிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"மலர்வில்லா"
வட்டு தென்மேற்கு
வட்டுக்கோட்டை

தகவல்: குடும்பத்தினர்.

மகன் - 077 510 9240

மருமகன் - 0775632512

(CR 42162) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு

அமரர் திருமதி புஷ்பராணி சர்வேஷ்வரன் ஞாபகார்த்தமாக, இணுவைத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்துள்ள க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு, இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 7.30 மணி முதல் பி.ப. 2 மணி வரை நடைபெறவுள்ளது. (ப–66)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பிரதி அதிபர்
**திருமதி யாழினி முரளி**
அவர்களின் பாசமிகு மாமனார்
அமரர்
**செகநாதபிள்ளை உலகநாதபிள்ளை**
**(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர், சுகாதாரத் திணைக்களம்)**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

தோற்றம் 06.06.1937
மறைவு 03.04.2024

பாடசாலைச் சமூகம்,
யா/டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி.

(CR 42161) S-1

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
13.05.1933

மறைவு:
21.03.2023

அமரர்

## இராசபூபதி நாகேந்திரம்

**திதி - 07.04.2024**

அம்மா குடும்பத்தை நேர்வழியில்
நிற்க வைத்த எம்தாயே எம்மை
தவிக்க விட்டு எங்கு சென்றாயோ?
நீயே உலகம் என்று உன்னைத்
தினம் தினம் கவனித்து எம்மை
விட்டு சென்று விடக் கூடாதென்று கண்ணும் கருத்துமாய்
கவனித்தோம் அம்மா
யாரும் இல்லாத எமக்கு தாயின் பிரிவின்
வேதனையும் வலியும் வார்த்தைகளால்
சொல்ல முடியாது அனுபவித்தால்
புரியும் அந்த வலியும் வேதனையும்
வஞ்சகம் செய்த காலனுக்கும் கிடைக்கும் அம்மா
எலும்புக்கும் தசைக்கும் மருத்துவம் கண்டான்
இதற்கோர் மருந்தைக் கண்டானா? கண்டால் உன்னை
தன்னந்தனியே எரியும் நெருப்பில் விடுவோமா
தாய் மனசு தங்கம் நாமறிந்த தெய்வம்
நன்றி சொல்லப் போதாதம்மா ஏழேழு ஜென்மம்
இது மாறாத சொந்தம் அம்மா உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

நாளை 07.04.2024 அன்னாரின் முதலாவது ஆண்டு ஆத்மா சாந்திப் பிரார்த்தனை அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து **141 கே.கே.எஸ் வீதி சுன்னாகத்தில் உள்ள திசா ஹோட்டலில் மதிய போசனமும் இடம்பெறும்.** உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சுன்னாகம்.** (CS/54642) J-1 **குடும்பத்தினர்**

## தராசோ வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக தராசோ வேலைகள் செய்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்

**077 334 1281**

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

ஒரு மாத ஊர்க்கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு.

**077 873 0129**

## வீடு வாடகைக்கு

71, பலாலி வீதி, புன்னாலைக் கட்டுவன் தெற்கில்
(EUT தளபாட தொழிற்சாலைக்கு அருகில்)
புதிதாக அமைக்கப்பட்ட 3 அறைகளைக்கொண்ட
நவீன வசதிகளுடன் கூடிய
**வீடு வாடகைக்கு உண்டு.**
வாடகைக் கட்டணம் நேரில்
பேசித்தீர்மானிக்கப்படும்.

**077 131 2987**

(CS/54599) J-1

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள
**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை), சமுத்திரா ரேடர்ஸ்**
(Hardwere) ஆகிய நிறுவனங்களில்
வேலைவாய்ப்புகள் உள்ளன.
ஆண், பெண் இருபாலாரும்
விண்ணப்பிக்கலாம்.

**077 494 9683, 077 077 6469**

(CS/28503) J-1

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வரையுள்ளது)

**கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்**
**கிளை இல 05 ற்கான இடம் தொடர்பான திருத்தம்.**

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக் கூட்டங்கள் நடைபெறாத கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல் மீளவும் 07.04.2024 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுவதற்கான ஒழுங்குகள் தொடர்பாகவும் மற்றும் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் தொடர்பாகவும் 2024.04.05 ம் திகதிய பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அதில் கிளை இல 05 கிளைக்கான கிளைக்குழுக் கூட்டம் நடைபெறும் இடம் வள்ளுவர் சனசமூக நிலையம் பத்திரகாளி கோவில் வீதி, வண்வடமேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை கிளை இல 05 அங்கத்தவர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட கூட்ட அழைப்பிதழில் குறிப்பிட்டவாறு கிளைக்குழுக் கூட்டம் ஆனது குறித்த கிளை இல 05 ன் கட்டடத்தில் நடைபெறும் என திருத்தி வாசிக்கவும்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**
**கிளைப்பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும்**
**2024.04.07 ஞாயிற்றுக்கிழமை**

| இலக்கம் | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 05 | வண்ணார்பண்ணை | கிளைக் கட்டடம் |

**செயலாளர்,**
**யாழ்.ப.நோ.கூ.சங்கம் - வது**

(JN.20841) (N-1)

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**
**28.03.2023 முதல் சித்திரைப்புத்தாண்டு வரை**

## ஆடைகளின் சாம்ராஜ்யம்

## இந்தியன் செலக்ஷனின்

சித்திரைப் புத்தாண்டு

## ஆடைக் கொண்டாட்டம்



திருமணப்பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள், சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள்,
சேட், ரீ சேட், பாட்டி புறொக், லெஹங்கா
மற்றும் ஏராளமான ஆடைத்
தெரிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே
முந்திக்கொள்ளுங்கள்

**விசேட விலைக் கழிவு**

ரெடிமேற் கொட்டன் சல்வார்
ரெடிமேற் நெற் சல்வார்
500/=

**28.03.2024 முதல்**
**சித்திரைப் புத்தாண்டு வரை**
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)


## இந்தியன் செலக்ஷன்

: வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
05
03
1959



மறைவு
30
03
2024

## திரு சதாசிவம் குகநேசன்

யாழ் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் . பிரான்ஸ் Paris. பிரித்தானியா Luton ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் குகநேசன் அவர்கள் கடந்த 30.03.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சதாசிவம்-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம்-ராமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெகதாம்பாளின் பாசமிகு கணவரும், மயூரன், லக்ஷமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹம்சிகா அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அருந்தவராணி, சுரேசன் மற்றும் கலைவாணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர்), சுந்தரமூர்த்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாம்பமூர்த்தி மற்றும் நடராஜா, தியாகராஜா ஆகியோரின் அன்பு மருமகனும், Dr ஈஸ்வரி (ஓய்வுபெற்ற வைத்தியர்), மதனகாமேஸ்வரி காலஞ்சென்ற மகேஸ்வரி (மலேசியா), ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் ராஜகுமாரி, தேவகுமார், விஜயகுமாரி, சண்முகதாஸ், விஜயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 2.00 மணிக்கு Luton Riversidi U.K ல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக Luton Vcle Cemetory U.K ல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

க. கணேசமூர்த்தி : 077 606 8656
க. ஈஸ்வரி : 077 650 9941

(CS 28502) V-1




25 வருட சேவை நிறைவினை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!

06.04.2024 – 13.04.2024
வரை மட்டும்

கவுஸ் ஒவ் செலெக்ஷன்

மாபெரும் மலிவு விற்பனை!


25% கழிவு

மகா சில்க்ஸ்,
பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
021 222 7359

(CS 00127) S-1

கவுஸ் ஒவ் செலக்ஷன்,
22J, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 7675

# மரண அறிவித்தல்



மலர்வு
29.02.1946

உதிர்வு
04.04.2024

## தர்மையா நாகேஸ்வரி

காரைநகர் பயிரிக்கூடலை பிறப்பிடமாகவும் S.M. கேணியடி, புது வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மையா நாகேஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம் (04.04.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தர்மையா அவர்களின் அன்பு மனைவியும், சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தில்லைநாதன் அவர்களின் அன்புச் சகோதரியும், மனோரஞ்சிதம் (Holand), ரவிச்சந்திரன் (Canada), காலஞ்சென்ற தேவரஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவானந்தன், வசந்தமலர் ஆகியோரின் மாமியாரும், பிரியா, பிரகாஷ் ராகவி, கவிசன், பிரதீஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மகன்: 0031636569495
மகன்: 0015145192078

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 00128) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றை அவமதித்ததாக அகிலனுக்கு அழைப்பாணை

திருகோணமலை, ஏப். 6

சுமந்திரனின் முறைப்பாட்டைத் தொடர்ந்து, தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான அகிலன் முத்துக்குமார சுவாமிக்கு நீதிமன்றத்தை அவமதித் குற்றச்சாட்டுக்காக அழைப்புக் கட்டளை அனுப்புமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான வழக்கு நேற்று திருகோணமலை நீதிமன்றத்தில் இடம் பெற்றது. இதன்போதே இணைய ஊடகமொன்றில் வெளியான அறிக்கை ஒன்று தொடர்பில் நீதிமன்றின் கவனத்துக்கு சுமந்திரன் கொண்டுசென்றார். அந்தக் அறிக்கையில் சுமந்திரனின் 'நிலைப்பாட்டை' அறிவ தற்காக வழக்கு எடுக்கப்படுகின்றது என்று குறிப்பிடுவ தற்குப் பதிலாக, சுமந்திரனின் 'சம்மதத்தை' பெறுவதற் காக வழக்கு எடுக்கப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள் ளமை உள்ளடங்கலாக மூன்று விடயங்கள் தொடர்பில் இந்த முறைப்பாட்டை சுமந்திரன் வழங்கியதையடுத்தே, அகிலன் முத்துக்குமாரசுவாமிக்கு நீதிமன்றத்தை அவ மதித் குற்றச்சாட்டுக்காக அழைப்புக் கட்டளை அனுப்பு மாறு திருகோணமலை நீதிமன்றம் நேற்று உத்தரவிட் டுள்ளது. (அ-ம)

# யாழ். மறைக்கோட்டத்தில் மருதமடு மாதாவின் பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 6

மருதமடு அன்னையின் முடி சூட்டு விழாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மடுமா தாவின் திருச்சொரூபம் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 9ஆம் திகதிவரை யாழ். மறைக்கோட்டத்தில் உள்ள ஆலயங்களில் மடுமாதா பவனி வரவுள்ளார். இதன்படி இன்று மு.ப. 10 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்திலும், பிற்பகல் 3 மணிமுதல் 3.30 மணிவரை புனித மடுத்தீனார் குருமடத் திலும், 4 மணிமுதல் 4.30 மணிவரை பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆல யத்திலும், 5 மணி முதல் 5.30 மணிவரை கொழும்புத் துறை புனித செபமாலை அன்னை ஆலயத்திலும் மாலை 6 மணிமுதல் நாளை காலை 7 மணிவரை மணி யந்தோட்டம் கர்த்தர் ஆலயத் திலும் மாதாவின் திருச்சொரூ பம் எழுந்தேற்றம் செய்யப் படுவதுடன் வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. (ம)

# விபத்தில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம் செம்மணி வளைவுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத் தில், நல்லூரைச் சேர்ந்த 61 வயது முதியவர் ஒருவர் உயி ரிழந்தார்.

சைக்கிளில் சென்றுகொண்டி ருந்த முதியவரை பின்னால் வந்த மோட்டார்சைக்கிள் மோதித்தள்ளியதாகத் தெரி விக்கப்படுகின்றது. படுகாய மடைந்த முதியவர் யாழ்ப்பா ணம் போதனா மருத்துவம னையில் சேர்க்கப்பட்ட நிலை யில் நேற்று உயிரிழந்தார்.

மோட்டார்சைக்கிளில் பய ணித்தவரும் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், நீதி மன்றின் அறிவுறுத்தலுக்கு அமைய அவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய் யப்பட்டுள்ளார். அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என்பது பொலிஸா ரின் முதற்கட்ட விசாரணை களின் அடிப்படையில் தெரிய வந்துள்ளது. (ம-26)

# முல்லைத்தீவில் புதிய தேவாலயம்



கிளிநொச்சி, ஏப். 6

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண பேராயத்துக்கான புதிய ஆலயம் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு கனகரா யன்குளம் பகுதியில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

திருச்சபை பொறுப்புக் குருவான அருட்பணி டிக்சன் உதயச் சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இந்தியாவிலிருந்து வந்த குழுவினர் ஆலய பெயர்ப்பலகை மற்றும் நினைவுக்கல் என்பவற்றைத் திறந்தனர்.

இந்தத் தேவாலயம் இந்திய தென்னிந்தியத் திருச்சபை தூத்துக் குடி நாசரேத் திருமண்டலத்தால் சமாதானம் மற்றும் நல்லுறவை வலுப்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண ஆதீனத்திடம் இந்த ஆலயம் கையளிக்கப்பட்டது. (ச-113)


# INVITATION FOR BID 2024/01
## Regional Directorate of Health Service Jaffna.

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from World Bank towards the cost of Primary Health Care System Strengthening Project (PSSP)-2024 and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.

02. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.

03. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

05. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents.

06. Interested bidders may obtain further information from **address given below in 7** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212222278, Fax:0212229971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.

08. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

09. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.

10. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | From 08.04.2024 until 19.04.2024 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 15.04.2024 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 22.04.2024 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
| NP/04/41/2024/PSSP/W/01 | Construction of Generator Room at DH Karainagar | 1.77 | 77Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 18,000.00 | Till 08.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/02 | Sewer Room partition work at BH Tellippalai | 0.25 | 28Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 3,000.00 | Till 08.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/03 | Construction of Generator room at DH Alaveddy | 1.54 | 75Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 08.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/04 | Partition of Clinic & Roof Renovation at DH Valvettithurai, | 0.98 | 68Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 10,000.00 | Till 08.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/05 | Renovation of OPD at DH Atchchuvelly | 1.69 | 77Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 08.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/06 | Renovation of Internal Road and Gate at PMCU Puththur. | 1.27 | 73ays | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 08.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/07 | Renovation of Kitchen,waste collection area and OPD at DH Karaveddy | 0.97 | 68Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 10,000.00 | Till 08.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/08 | Renovation of OPD,Drivers room and Electrical works at DH Maruthankerny | 1.58 | 76Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 08.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/09 | Construction of Generator room at DH Velanai | 1.65 | 76Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 08.07.2024 |
| NP/04/41/2024/PSSP/W/10 | Renovation of OPD Maternity ward & Gate at ward & Gate at DH Alaveddy | 0.99 | 69Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 10,000.00 | Till 08.07.2024 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service, Jaffna.**

(cr- 42156) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹைதராபாத்திடம் நேற்று சரணடைந்தது சென்னை!

சென்னை, ஏப். 6

ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில், முகேஸ் சவுத்ரி வீசிய பல வீனமான ஓவரால், ஹைதராபாத் அணியிடம் இலகுவாகச் சரணடைந்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி சென்னையை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. ஆரம்ப வீரர் ரச்சின் ரவீந்திரா ஏமாற்றினார். அணித்தலைவர் ஹெய்க்வாட், ரகானே இருவரினதும் இன்னிங்ஸில் நேற்று நிதானமமே எஞ்சியிருந்தது. 30 பந்துகளில் 35 ஓட்டங்களைப் பெற்று ரகானேயும், 21 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்று ஹெய்க்வாட்டும் ஆட்டமிழந்தனர். துபே மட்டும் அதிரடியாக விளையாடி 45 ஓட்டங்களைப் பெற்றார். ஜடேஜா 23 பந்துகளில் 31 ஓட்டங்களைச் சேர்த்தார். டாரி மிச்செலின் ஆட்டத்தில் நேற்றும் நிதானமே எதிரொலித்தது. முடிவில் 5 விக்கெட்களை இழந்து 165 ஓட்டங்களையே சென்னையால் பெறமுடிந்தது.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு ஆரம்ப வீரரான அபிஷேக் சர்மா மிரட்டலான ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தார். குறிப்பாக சென்னை அணியின் 'இம்பாக்ட் வீரர்' முகேஸ் சவுத்ரி வீசிய இன்னிங்ஸின் இரண்டாவது ஓவரில் 27 ஓட்டங்களை அபிஷேக் விளாசினார். இந்த ஓவர் ஆட்டத்தை சென்னையிடமிருந்து பறித்தது. 12 பந்துகளில் 37 ஓட்டங்களுடன் அபிஷேக் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சென்னை அணி அழுத்தத்தை வழங்கிய போதிலும் ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. மார்க்ரம் பொறுமையாக ஆடி 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். முடிவில் 11 பந்துகள் மீதமிருக்க சென்னையை வீழ்த்தியது ஹைதராபாத். (ம)

## மக்களின்...

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலாளர் பகுதிக்குட்பட்ட பகுதியில் சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக நேற்றையதினம் கனியவளத் திணைக்களத்தினரால் அளவீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பான பணிகளுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்தப் பகுதிக்குச் சென்றபோதே பொதுமக்கள் ஒன்றுதிரண்டு அவருக்குத் தமது எதிர்ப்பை வெளியிட்டார்கள்.

இதன்போது சிமெந்துத் தொழிற்சாலைக்கு ஆதரவாக, மக்கள் இருக்கின்றார்கள் என்று காட்டும் நோக்கில் பஸ்களில் பொதுமக்கள் பலரையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைத்துச் சென்றிருந்தார். ஆனால், அவ்வாறு சென்றிருந்த மக்களுக்கு பொன்னாவெளி மக்கள் தங்கள் போராட்டத்தின் நியாயத்தைத் தெரிவித்தனர். அதனையடுத்து, அவர்கள் "எங்களை கூட்டம் என்று சொல்லியே அழைத்துவந்தார்கள். உங்களுக்கு எதிராகப் போராடுவதற்காக அழைத்திருந்தால் வந்திருக்கமாட்டோம்" என்று கூறித் திரும்பிச் சென்றனர்.

இதன்போது அமைச்சருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. வாய்த்தர்க்கம் தள்ளுமுள்ளாகவும் மாறியுள்ளது. இதையடுத்து பொலிஸார் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தினார்கள். மக்களின் தொடர் எதிர்ப்பையடுத்து நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டு அமைச்சர் திரும்பிச் சென்றார்.

(அ-ம-27-113-214)

## 2,506 ஏக்கர்...

குச்சவெளியின் சனத்தொகையில் 65 வீதமானவர்கள் தமிழர்களாகவும், 33 வீதமானவர்கள் முஸ்லிம்களாகவும், 02 வீதமானவர்களே சிங்களவர்களாகவும் உள்ளனர். இந்த 02 வீதமான சிங்களவர்களுக்காகவே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான நிலப்பரப்பு ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு 32 விகாரைகள் அமைக்கப்படவுள்ளன. இந்த 32 விகாரைகளில் 25 விகாரைகளுக்கான கட்டுமானப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டவிரோத காணி அபகரிப்புக்கு எதிராகப் பல்வேறு வழக்குகள் காணி உரிமையாளர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி குச்சவெளி பிரதேசத்திலுள்ள 11 வழிபாட்டுத்தலங்கள் புனித பூமியாக பெயரிடப்பட்டுள்ளன. இவற்றுள் நான்கு விகாரைகளும் அடங்கியுள்ளன. இதற்கான ஆவணங்கள் ஜனாதிபதி செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கும்புறுப்பிட்டி வடக்கு, கும்புறுப்பிட்டி கிழக்கு, திரியாய், நிலாவெளி, ஜெயநகர், குச்சவெளி, காசிநகர், கள்ளம்பத்தை, புல்மோட்டை 01, புல்மோட்டை 03, புல்மோட்டை 04, தென்னமரவாடி உள்ளிட்டனவே அபகரிக்கப்பட்டுள்ள கிராமங்களாக அமைந்துள்ளன. (அ-ம-6)

## சுற்றுச்சூழலை...

திலக் சி.ஏ.தனபால தெரிவித்தார்.

வடமாகாணத்தில் உள்ள பொலிஸ், உள்ளூராட்சி அதிகாரிகள் மற்றும் சமூகத்தின் ஒத்துழைப்புடன் அடுத்த சில நாள்களில் வடமாகாணத்தில் சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தும் விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தில் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் நபர்களுக்கு எதிராகச் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு வடமாகாணத்திலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளேன். சுற்றுச்சூழலுக்கு உகந்த வடக்கு மாகாணத்தை உருவாக்கமுடியும் என்பது எனது நம்பிக்கை - என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ.தனபால மேலும் தெரிவித்தார். (அ-ம-26)

## ஆறு...

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி.எல்.பீரிஸ், டிலான் பெரேரா, நாலக கொடஹேவா, வசந்த யாப்பா பண்டார, மருத்துவர் உபுல் கலப்பதி, குமாரசிறி ஆகியோரே இவ்வாறு கூட்டணியில் இணைந்துள்ளனர்.

ஜி.எல்.பீரிஸ் தலைமையிலேயே மேற்படி ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இந்தக் கூட்டணியையடுத்து, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை மூன்று அணிகளாகப் பிளவுபட்டு நிற்கின்றமை உறுதியாகியுள்ளது. ஜி.எல்.பீரிஸ் தலைமையில் மேற்படி ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட்டுவந்தாலும் நேற்றையதினமே புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு கூட்டணியில் இணைந்தனர்.

கொழும்பில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-44)

## மாவீரர்களை...

விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி ஷமிந்த விக்கிரம இந்தத் தகவலை நீதிமன்றில் தெரியப்படுத்தினார்.

"உயிரிழந்த புலிகளை நினைவுகூர்வதைத் தடுக்கவும், மாவீரர் துயிலுமில்லங்களை உருவாக்காதிருக்கவும் கட்டுப்படுத்த சிறப்பான நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். ஆனாலும் அவை தொடர்ந்து இடம்பெறுவதால், இனிவரும் காலங்களில் இன்னும் இறுக்கமான வகையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூரும் சகல நிகழ்வுகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என நீதிமன்றில் உறுதி கூறுகின்றோம்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## காணி...

நடவடிக்கைக்காக நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் காலை முன்னறிவிப்பின்றி அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தனர். நில அளவைத் திணைக்களத்தினரின் வருகையை அவதானித்த பொதுமக்கள், ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி காணி அளவீட்டு முயற்சிகளைத் தடுத்து நிறுத்தினார்கள். இதையடுத்து அளவீட்டுப் பணிகளைத் தற்காலிகமாகக் கைவிட்டு அதிகாரிகள் திரும்பிச் சென்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் ஆகியோரும் காணி அளவீட்டுப் பணிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-100-66)

## இவர்களுக்கு...

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

5 வருடங்களுக்கு மேல் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பணியிட மாற்றம் செய்யப்படுவதே வழமையான நடவடிக்கையாகக் காணப்படுகின்றது. எனினும், 2 உதவிப் பிரதேச செயலர்கள், 5 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 28 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், 13 அலுவலக உதவியாளர்கள் என 48 பேர் இவ்வாறு 7 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வருகின்றமை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகத் தெரியவந்துள்ளது. (அ-ம-125)

## நாமல்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போதுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களில் சவாலை ஏற்கக்கூடிய, வெற்றிபெறக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான். நாமல் ராஜபக்சவுக்கு இன்னும் காலம் இருக்கின்றது என அவரின் தந்தையே கூறிவிட்டார். அரசியலில் அனுபவம்பெற்ற தலைவரான மஹிந்தவின் அந்தக் கருத்தை அனைவரும் ஏற்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நாமல் ராஜபக்ச இன்னும் எதுவும் கூறவில்லை. களமிறங்கும் முடிவை நாமல் எடுத்தால் கட்சி இரண்டாகப் பிளவுபடும். தேசிய அமைப்பாளர் என்ற வகையில் அவ்வாறானதொரு முடிவை நாமல் எடுக்கமாட்டார் என்றே நம்புகின்றேன். ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவாரா என்பது தெரியாது. ஆனால் போட்டியிட்டால் அவர்தான் பொருத்தமான வேட்பாளர்" - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக்கு...

தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளுக்கு எதிராகவும், ஜனவரி 21 மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளை இரத்துச் செய்யக்கோரியும் திருகோணமலையை சேர்ந்த ஒருவரால் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில், 6ஆம் எதிராளியான சுமந்திரனின் நிலைப்பாட்டை அறிவதற்காக வழக்கு நேற்றுத் தவணையிடப்பட்டிருந்தது.

வழக்காளி முன்வைத்த விடயங்களில் தனக்கு ஆட்சேபனை இருப்பதாகத் தெரிவித்த சுமந்திரன், 20 பேரைக் கூடுதலாக வாக்களிக்க அனுமதித்தது மட்டுமே யாப்பை மீறிய சட்டரீதியற்ற நடவடிக்கை என்றும் ஏனைய நடவடிக்கைகள் யாவும் யாப்பின்படியே இடம்பெற்றதாகவும் நீதிமன்றத்தில் பதிவுசெய்தார். அத்துடன் 20 பேர் கூடுதலாக வாக்களித்த போதிலும் அது தலைவர் தெரிவில் தாக்கத்தைச் செலுத்தவில்லை என்பதையும் சுமந்திரன் தன் சமர்ப்பணத்தில் சுட்டிக்காட்டினார். எதிராளிகளில் ஒருவரான சுமந்திரனின் ஆட்சேபனையைத் தெரிவித்ததால், ஏனையஎதிராளிகள்தமக்கும்ஆட்சேபனையைத்தெரிவிக்கவேண்டியதேவையுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தனர். அவர்களின் ஆட்சேபனைக்காக வழக்கு எதிர்வரும் 24ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

**இடைபுகுமனுதாரர்**

அத்துடன், இந்த வழக்கில் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையைச்சேர்ந்த ரட்ணவடிவேல் என்ற நபர் தன்னை இடைபுகு மனுதாரராகச் சேர்க்கும்படி நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்தார். அவர் இடைபுகுமனுதாரராகச் சேர்க்கப்படுவதற்கு சுமந்திரன் எதிர்ப்பைப் பதிவுசெய்யவில்லை. ஆனால், ஏனைய எதிராளிகளும் வழக்காளியும் ரட்ணவடிவேல் என்ற நபர் வழக்கில் இடைபுகுமனுதாரராகச் சேர்க்கப்படுவதற்கு தமது ஆட்சேபனை யைத் தெரிவித்தனர். இடைபுகுமனுதார ராக அவர் சேர்க்கப்படும் பட்சத்தில் விரைந்து முடிக்கப்படவேண்டிய தேவை யுள்ள இந்த வழக்கு இழுத்தடிக்கப்படும் என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆதலால், இந்த விடயத்தில் இந்த ஆட்சேபனையையும் எதிர்வரும் 24 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

**தவராசா கருத்து**

வழக்கின் பின்னர் செய்தியாளரைச் சந்தித்த, ஜனாதிபதி சட்டத்தரணியும், தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவருமான சட்டத்தரணி தவராசா தெரிவித்ததாவது:-

இந்த வழக்கு உண்மையில் வெல்லப்பட வேண்டிய வழக்கு. ஆனால், இது சொத்துப் பிரச்சினையோ அல்லது காணிப் பிரச்சினையோ இல்லை. மக்களின் பிரச்சினை. ஆதலால் இந்த வழக்கை நாங்கள் விரைந்து முடிக்கவே விரும்புகின்றோம். சுமந்திரன் தன் ஆட்சேபனையைச் சமர்ப்பிக்காமல் இருந்திருந்தால் வழக்கு இன்றுடன் (நேற்றுடன்) முடிவடைந்திருக்க வாய்ப்பிருந்தது. சுமந்திரன் ஆட்சேபனையைச்சமர்ப்பித்ததால் நாங்களும்தற்போது ஆட்சேபனையைச் சமர்ப்பிக்கவேண்டியுள்ளது.

2010ஆம் ஆண்டு இருந்த தமிழரசுக் கட்சியின் அமைப்பு விதிகளின் பிரதிகளே இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. 2013ஆம் ஆண்டு நாங்கள் சிலதிருத்தங்களைக் கொண்டுவந்து அமைப்பு விதிகளைத் திருத்தி தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து அவருடைய ஒப்பத்தையும் பெற்றிருந்தோம். ஆனால், அந்தத் திருத்தங்கள் வழக்கில் இணைக்கப்பட்டிருக்கவில்லை.


இவ்வாறான ஆட்சேபனைகளை முன்வைத்துவழக்கைவெல்லமுடியும். ஆனால் அந்த வெற்றிக்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். கால இழுத்தடிப்புக்குப் பின்னர் பெறப்படும் வெற்றி தோல்வியாகவே அமையும். எனவேதான் இந்த வழக்கை விரைந்து முடிக்க விரும்புகின்றோம். அத்துடன் வழக்கில் இன்று இடைமனுதாரர் ஒருவர் இணையவிரும்புவதாக மனு சமர்ப்பித்துள்ளார். கடந்த தவணையின்போது இடைமனுதாரராக தன்னை இணைத்துக் கொண்டவர் இன்றையதினம் வழக்கில் முன்னிலையாகவில்லை. இவ்வாறான இடைமனுதாரர்கள் வரும்போது வழக்கு காலதாமதமடையும். ஆகவே நாம் எதற்காக அஞ்சினோமோ அதை நோக்கித்தான் வழக்கு நகர்ந்து செல்கின்றது - என்றார்.

**சுமந்திரன் கருத்து**

வழக்கின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த, ஜனாதிபதி சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்ததாவது:-

சென்ற தடவை மற்றைய ஆறு எதிராளிகளும் வழக்காளி கேட்டுக்கொள்கின்ற அனைத்து நிவாரணங்களையும் கொடுக்க தாங்கள் தயார் என்று மன்றுக்கு அறிவித்திருந்தனர். வழக்கைத் துரிதமாக முடிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் அவர்கள் அவ்வாறு செய்திருந்தாலும்கூட அதற்குப் பின்னர் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல்குழுக்கூட்டத்திலே, கட்சியுடைய வரலாற்றிலே ஒரு சரித்திர ஆவணமாக கட்சி நிர்வாக்கள் யாப்பைத் தெரிந்துகொண்டே மீறிச் செயற்பட்டார்கள் என்கின்ற பதிவு இருப்பது விரும்பத்தக்கதல்ல என்ற முடிவு எடுக்கப்பட்டது. இந்த வழக்கிலே ஒரு சிறு தவறுகளைத் தவிர வழக்காளி சொல்கின்ற யாப்பு மீறல்கள் இடம்பெறவில்லை என்பது எங்களுடைய நிலைப்பாடு. குறிப்பாக பொதுச் சபையில் தவறில்லை என்கின்ற கட்சியின் நிலைப்பாடு பதிவுசெய்யப்பட வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் அரசியல்குழு அண்மையில் தீர்மானித்தது. அதன் பிரகாரம் இன்றையதினம் (நேற்று) நான் எனது ஆட்சேபனையில் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளேன். அத்துடன், மாவை சேனாதிராசாவால் 20 பேர் வரையில் சட்டத்துக்குப் புறம்பாகவாக்களிக்க அனுமதிக்கப்பட்டாலும் அது தலைவர் தெரிவில் தாக்கத்தைச் செலுத்தவில்லை என்பதையும் நான் மன்றுக்குச் சொல்லியுள்ளேன். வழமையாக ஆட்சேபனையைத் தாக்கல் செய்வதற்கு ஓர் அவகாசத்தை கேட்பது வழமை. ஆனால், நான் வழக்கு முடியுறுத்த வேண்டியதன் அவசரம் காரணமாக இன்றையதினமே ஆட்சேபனைச் சமர்ப்பணத்தை முன்வைத்துள்ளேன். எனினும் ஏனைய எதிராளிகளும் ஆட்சேபனை அணைப்பதற்காகக் கோரிய நிலையில் வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

# மரண அறிவித்தல்



மண்ணுலகில்
02.06.1944

விண்ணுலகில்
03.04.2024

## மாதர் மகாலிங்கம்

பழம் றோட், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாதர் மகாலிங்கம் கடந்த 03.04.2024 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதர் - பூமணி தம்பதியரின் சிரேஸ்ட மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்தானலக்சுமியின் பாசமிகு கணவரும், பிரபாகரன் (அவுஸ்ரேலியா), சுரேந்திரன் (லண்டன்), சதீஷ்குமார் (ஆசிரியர் - யா/ ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்), தினேஸ்குமார், ரமேஸ் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசீதா, தர்ஷிகா, தர்மினி (ஆசிரியை - யா / ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), கௌசலா (ஆசிரியை - யா / சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்), பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும், நடராசா, காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, சின்னராசா மற்றும் செல்வராசா ஆகியோரின் சகோதரனும், நிகேதன், நித்திலன், விகாஷ், தருணிகா, லக்ஷிகா, பிரக்ஷிகா, நிஷான், டிசானா, கனிஸ்கா ஆகியோரின் பேரனும், இராசமலர், பாலசிங்கம், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் புஸ்பமலர், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், அன்னலெட்சுமி மற்றும் இராசலட்சுமி, மகாலிங்கம், இராசலிங்கம், சிவலிங்கம், தனலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 9.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழம் றோட்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
021 221 3130
077 691 3133

(cs.54640) (n-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக் காணி விற்பனைக்கு

சங்கானை வீதி
அச்சுவேலி ஒட்டகப்புலம்
மக்கோனா சீர்திருத்தப்
பள்ளி அருகில்)
30 பரப்பு வீட்டுக் காணி
விற்பனைக்கு உண்டு.

**0044 772 715 3689**
**0044 730 634 4296**

(CS/54623) J-1

# கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு



**ரஞ்சனாஸ் (Ranjanas)** நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட உயர் தரத்திலான தரை மற்றும் சுவர் ஓடுகள் **(Tiles)** இப்பொழுது எம்மிடம் கண்கவர் வண்ணங்களிலும், கவர்ச்சிகரமான விலையிலும் அத்துடன் அனைத்து வகை குளியலறை சாதனங்களும் பொருத்துகளுடன் பெயின்ட் **(Paint)** வகைகளையும் எம்மிடம் வாங்கலாம் பழைய இருப்புகளுக்கு **50 %** விலைக்கழிவும் வழங்கப்படும்.

**"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"**

# ஆர்க் . என் . கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். - 021 222 4688
- A9 வீதி, எழுதுமட்டுவாள். - 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் - 021 228 2020

**Hotline: 071 535 7799 / 071 973 9917**

(CS/54637) (n-1)

## காணி விற்பனைக்கு

நல்லூரில் 5 3/4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. மற்றும் கொழும்பு வெள்ளவத்தை, தெஹிவளையில் Apartments, கடைகள், தனி வீடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
**077 968 1340**

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் வடக்கு, மருதங்குளம் விழுபளை வீதியில் வடக்கு நோக்கி 1/2 க் கி.மீ தூரம் நிலப்பரப்பு - 65 தென்னை, தோட்டப் பயிர்செய்கைக்கு உகந்த நிலம். தரகர் தேவை இல்லை.

(CS/54627) J-1

**077 691 4151, 021 227 0948**

# 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி பொன்னையா



24 ஆண்டுகள்
அல்ல
100 ஆண்டுகள்
சென்றாலும் உங்கள்
நினைவுகளை
மறவோம்.

மகன் குடும்பத்தினர்.
பரமசாமி

(CS/54624) J-1

# ஆலய வேலைகள் செய்வதற்கு வேலையாள் தேவை


யாழ்ப்பாணத்தில் அமைந்துள் பிரபல சைவ ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பல வேலைகளையும் செய்யக் கூடிய ஆண் உதவியாளர் தேவை.

**மானிப்பாய், சுதுமலை, இனுவில், மருதனார்மடம், தாவடி** போன்ற பிரதேசங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. ஏனையவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுடையோர் எதிர்வரும் 14.04.2024 க்கு முன்னர் உங்கள் விபரங்கள் அடங்கிய கடிதத்தினை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக் கவும். (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்).

விளம்பர இலக்கம் : J/1001

**மே/பா உதயன் பணிமனை,**
**361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# மரண அறிவித்தல்



## சிவசாமி கிருபாகரன்

(BSc Med SLPS - 1)

**(இளைப்பாறிய அதிபர் வேலணை மத்திய கல்லூரி, முன்னாள் அதிபர் இனுவில் இந்துக்கல்லூரி, முன்னாள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கணிதம் - வலிகாமம் கல்வி வலயம்)**

முன்னாள் ஆசிரியர் திருகோணமலை T/St Marys College , M/Mallavi Central College , J/Velanai Central College, J/Thampatti G.T.H.S, J/Saravanai Nageswary M.V

சோளாவத்தை வேலணை வடக்கை பிறப்பிடமாகவும், கோவில் வீதி கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி கிருபாகரன் நேற்று (05.04.2024) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசாமி - செந்தமிழ்ச்செல்வி தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்ற தம்பு தனநாயகம் மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த மருமகனும், றமணி அவர்களின் அன்புக் கணவரும், சிவசங்கர், சிவமைந்தன், தேனுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திவாணி சிவசங்கரின் பாசமிகு மாமனாரும், தெய்வச்சிலை, ஜெகநாதன், தயாபரன், பகீரதன், பார்த்தசாரதி, அறிவரசி, அன்பரசி ஆகியோரின் சகோதரனும், ஜெகநாதன், ஞானசக்தி, சந்திரவதனி, மதிவதனி, ஜெகராயசேகரம், கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரவழி மைத்துனரும், வனிதா, கிருபாகரன், தயாபரன் ஆகியோரின் துணைவி வழி மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 10.00 மணியளவில் பூதவுடல் வேலணைக்கு அஞ்சலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு தகனக்கிரியைகள் சரவணை புன்னாங்கட்டி இந்துமயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை மண்ணில்
10.06.1963

சங்கரன் அடியில்
05.04.2024

147/4 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
**074 071 1993**
**077 614 0269**

(CS/54636) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.